OS: 509/2018

Date: 04.02.2026

பெயர் : சந்திரசேகரன் **(பி.வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் இந்த வழக்கின் மூன்றாம் பிரதிவாதி. 4ம்பிரதிவாதி எனது மனைவி. வாதி என்ன பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் தனியாக பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றாலும் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை எனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்றாலும் ஆமாம்.

2. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1 முதல் 7 பிரதிவாதிகளான நாங்கள் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வாதி கோவிலின் மீதும், ஓமலூர் டவுன் பஞ்சாயத்து செயல் அலுவலர் மீதும் அ.வ.எண்.255/2007 என்ற வழக்கை 27.09.2007ம் தேதியன்று தாக்கல் செய்திருந்தோம் என்றால் ஆமாம். அந்த வழக்கில் வாதி கோவிலின் தர்மகர்த்தாக்கல் பதிலுரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் ஓமலூர் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி நினைவில்லை.

3. எனக்கு அதுபற்றி தெரியும் என்றாலும் நான் வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.252/2007 வழக்கினை வாதி மேட்டூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றகோரி சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Tr.O.P. 137/2008 தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டதன்பேரில் மேற்படி வழக்கானது மேட்டூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அந்த நீதிமன்றத்தில்

அ.வ.எண்.38/2011 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை.

4. எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றாலும் நான் மேற்படி வழக்கில் எம்.ஏ. விஜயராஜன் என்ற வழக்கறிஞர் மூலம் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தேன் என்றால் மணி என்பவர் அறிமுகபடுத்தி வைத்தன்பேரில் ஒரு வழக்கறிஞர் வைத்திருந்தேன் அவர் பெயர் நினைவ்லலை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள மூன்றாவது கையெழுத்து என்னுடையது என்றாலும், 4வது கையெழுத்து என்னுடைய மனைவியுடைது என்றாலும் ஆமாம்.

5. இந்த வழக்கில் கோவில் தர்மகர்த்தாவான மனோகரன் என்பவரை முதல் சாட்சியாக விசாரித்தபோதிலிருந்தே நான் ஆஜராகி வழக்கு நடத்தி வந்தேன் என்றால் ஆமாம். ஓரிருமுறை அவரை விசாரித்தபோது நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். நான் ஓரிருமுறை வந்ததாக சொல்வது பொய் என்றாலும் அவரை விசாரித்தபோது அனைத்து வாய்தாக்களிலும் ஆஜராகி இருந்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல, அவரை எத்தனை முறை விசாரித்தார்கள்என்று எனக்கு தெரியவில்லை, ஆனால் நான் ஓரிருமுறை வந்திருக்கிறேன்.

6. மேற்படி சாட்சி மனோகரனை நாங்கள் கொடுத்த தகவலின்பேரில்தான் வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள் என்றால் நான் எனது பத்திரம் சம்பந்தப்பட்ட தகவல்களை கொடுத்திருந்தேன். வாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற விவரமும், என்னென்ன ஆவணங்கள் குறியீடு செய்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் கிஷ்து ரசீது போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். கோவில் சார்பாக குறியீடு செய்த ஆவணங்களின்

நகல்களை வாதியே எனது வழக்கறிஞருக்கு கொடுத்திருக்கிறார் என்றால் ஆமாம். ஆனால் அதில் உள்ள விவரங்கள் தெரியவில்லை.

7. 2019ம் ஆண்டு 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையை நான் குறிப்பாணை தாக்கல் செய்து எனது பதிலுரையாக ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்றால் மணி என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்று எனக்கு தெரியாததால் எனக்கு இந்த கேள்விற்கு பதில் தெரியவில்லை. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் கோவில் நிலத்தை வீட்டு மனைகளாக விற்கபட்டது சரியானதாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார் என்றால் அவர் என்ன சொன்னார் என்று தெரியவில்லை ,ஆனால் நான் கோவில் நிலத்தை வாங்கவில்லை. தனிப்பட்ட நபரிடமிருந்து தான் வாங்கியிருக்கிறேன்.

8. மணி தாக்கல் செய்திருந்த பதிலுரையில் தாவா சொத்துக்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லிருக்கும் நிலையில் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும் அதில் வாதிகள் எந்த வித உரிமையும் கோரமுடியாது என்றும் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுதான் உண்மை. 90 வருட ஆவணங்களில் யூனியன் சந்து என்று தான் 1934ம் ஆண்டு மூலப்பத்திரத்தில் இருந்தே வந்திருக்கிறது.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமான 1937ம் வருட Revenue settlement Register–ல் தாவா சர்வே எண் 81/1N என்பது ராமலிங்க சௌடேஸ்வரியம்மன் பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சாட்சி முதலில் தனக்கு அதுபற்றி தெரியாது என்று சொல்லிவிட்டு பின்னர் வாதி வழக்கறிஞர் வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டியவுடன் அதில் அவ்வாறு தான் இருக்கிறது என்கிறார். எனது சொத்து தாவா சொத்திற்கு தென்புறமாக இருக்கிறது என்றால் ஆமாம். எனது சொத்தின் சர்வே எண்.

81/10 (ஓ) என்றால் ஆமாம். அது கிருஷ்ணசாமி செட்டியின் பெயரில் இருக்கிறது என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அப்படிதான் இருக்கிறது. ஆனால் நாங்கள் பெரியதம்பி ஆசாரியிடமிருந்து தான் கிரையம் வாங்கினோம்.

10. எனது சொத்து மற்றும் தாவா சொத்து உட்பட அனைத்து சொத்துக்களுக்கும் 81/1ன் அனைத்து உட்பிரிவுகளுக்கும் பழைய சர்வே எண். 73 என்று காணப்படுகிறது என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அப்படிதான் இருக்கிறது. தாவா சொத்தில் கட்டிடம் எதுவும் இல்லை என்றாலும், காலி இடம் என்றாலும் ஆமாம். தாவா சொத்து பொதுமக்கள் பயன்படுத்தும் பொது பாதை என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் நிலையில் அதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம், அந்த இடத்தில் ஒரு பொது கிணறு இருக்கிறது.

11. அந்த கிணறிற்கு செல்தற்கு தாவா சொத்தின் வழியாக தான் செல்லவேண்டும் அந்த பொது கிணற்றிற்கு தாவா தடத்தை தவிர வேறு எந்த தடமும் இல்லை. அந்த பாதையில் எலக்ட்ரிக் லைனும், பைப் லைனும் இருக்கிறது. அந்த பொது கிணறு 25 வருடங்களுக்கு முன்பே தூர்ந்து போய்விட்டது என்றால் சரியல்ல. அதில் தண்ணீர் எடுத்துக்கொண்டுதான் இருந்தார்கள் தற்போது தான் அது தூர்ந்து போய்விட்டது. தாவா சொத்து ஓமலூர் பேரூராட்சியால் நாளது தேதிவரை பராமரிக்கப்பட்டு வருதாக எனது பதிலுரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லியிருக்கும் நிலையில் அதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் பராமரிக்கும் நபர்கள் தினமும் வந்து அதனை பராமரித்து சுத்தம் செய்கிறார்கள். ஆனால் அதற்கு போட்டோ எடுத்து ஆவணம் எதுவும் வைத்துக்கொள்ளவில்லை.

12. தாவா சொத்து வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டதல்ல என்று நான் வழக்காடும் நிலையில் அது யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் ஏதாவது ஒப்படைத்திருக்கிறோமா என்றால் ஆமாம், எனது மூலப்பத்திரத்தில் செக்குபந்தியில் யூனியன் கக்கூஷ் சந்து பொது பாதை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்கிறேனா என்றால் நான் அப்படி சொல்லவில்லை. அது பொது என்றுதான் சொல்கிறேன்.

13. தர்மபுரி மெயின்ரோட்டுக்கு கிழபுறமாக தாவா சொத்தும் எனது கட்டிடமும் இருக்கிறது என்றால் ஆமாம். எனது நிலத்தின் கிழமேல்அளவு 53 3/4அடி என்றால் சரியல்ல 55 அடி ஆகும். தென்வடல் மேற்குபுறம் 29 ½ அடி என்றாலும், கிழபுறம் 30 அடி என்றாலும் சரியல்ல, பத்திரபடி எனக்கு இருபுறம் 30 அடிதான். எனக்கு இரண்டு கிரையம் மூலம் சொத்து கிடைத்தது, அதில் 16 க்கு 55, 16க்கு 55 என்று கொடுத்தார்கள் ஆனால் மொத்தம் 30 என்று சொல்லி கொடுத்தால் 30 அடியை அனுபவிக்கிறேன். அந்த இடத்தில் மருத்துவமனை கட்டிடம் இருக்கிறது என்றால் ஆமாம்.

14. அந்த கட்டிடத்திற்கு பின்புறம் ஓ.கே.ஏகாம்பரம் என்பவர் 1993ம் வருடம் ஒரு மனை நிலம் சர்வேஎண் 81/4ல் வாங்கியிருக்கிறார் என்றால் ஆமாம். அவரிடமிருந்து நான் கிரையம் வாங்கினேன். அந்த கிரையத்தில் லிங்கம்மாள் பட்டா நிலம் என்று செக்குபந்தி சொல்லப்பட்டிருக்கும். நான் கிரையம் பெற்ற நிலத்திற்கு கிழபுறம் 5 முதல் 7 பிரதிவாதிகளான மோகன்ராஜ், லட்சுமி, பாபு ஆகியோர்கள் கிரையம் பெற்றிருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

15. ஓ.கே.ஏகாம்பரம் கிரையம் கொடுத்த நிலத்திற்கு வடபுறம் பஞ்சாயத்திற்கு சம்பந்தப்பட்ட நிலம் இருக்கிறது என்றால் ஆமாம், அதில் தான் பொது கிணறு இருக்கிறது. அந்த பஞ்சாயத்து நிலத்தில்தான் ஓ.கே.

ஏகாம்பரம் பொதுபாதை விட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் வடபுறம் பஞ்சாயத்து போர்டு சந்து வழி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அதில் இருக்கிறது, ஆனால் எனது கார் செட்டிற்கு எதிர்புறமும், பாபு வீட்டிற்கு எதிர் புறம் இருக்கும் இடமும் அந்த பொது கிணறோடு சேர்ந்து ஒரு சதுரமாக இருக்கும் அந்த சதுரமே பொதுவானது என்று தான் நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

16. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற சான்றாவணம் எண்.3ல் 81/5 என்ற இடம் தான் சதுரமாக உள்ள இடமாக சொல்கிறேனா என்றால் ஆமாம்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்கா ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.